பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
20 07 2024 **SATURDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மைக்ரோசாஃப்ட் மென்பொருள் பிரச்சினை காரணமாக பாதிக்கப்பட்ட விமான சேவை சீரடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. மின்விநியோகத்தில் ஏற்படும் இழப்புகளை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பங்களாதேஷில் வசிக்கும் தமிழர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குமாறு, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

4. சர்வதேச செஸ் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில், இந்தியா ஆடவர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

மைக்ரோசாஃப்ட் மென்பொருள் பிரச்சினை காரணமாக பாதிக்கப்பட்ட விமான சேவைகள் சீராகியுள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை இணையமைச்சர் திரு **Murlidhar Mahol** கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், விமானங்கள் வழக்கம் போல இயக்கப்படுவதாக கூறினார்.

இதற்கிடையே, இந்தப் பிரச்சினை காரணமாக ஏர்இண்டியா நிறுவனத்தின் எந்தவொரு விமானத்தின் சேவையும் ரத்து செய்யப்படவில்லை என்று அந்த நிறுவனம் தெளிவுபடுத்தியுள்ளது.

நேற்று ஒரு சில விமானங்களின் புறப்பாடு மட்டுமே தாமதமானதாக அந்த நிறுவனத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்நிலையில், சென்னை விமான நிலையத்தின் இணையதள சேவைகள் சீரடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேகா 35 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

உலக பாரம்பரிய குழுவின் கூட்டம் புதுதில்லியில் நடைபெறவுள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாளை இந்த கூட்டத்தின் தொடக்கவிழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கவுள்ளதாக தெரிவித்தார்.

வரும் 31ஆம் தேதிவரை இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

மின்விநியோகத்தில் ஏற்படும் இழப்புகளை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கேட்டுக் கொண்டுள்ளார்.

சண்டிகரில் நகர்ப்புற மின் திட்டங்கள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அவர் பேசினார்.

மேம்படுத்தப்பட்ட மின்விநியோக கட்டமைப்பு திட்டத்தை மாநில அரசுகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள், குறித்த காலத்திற்குள் நிறைவேற்றப்படுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

பங்களாதேஷில் வசிக்கும் தமிழர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குமாறு, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பங்களாதேஷில் மாணவர்கள் போராட்டம் காரணமாக, வன்முறை ஏற்பட்டுள்ளதை அடுத்து, முதலமைச்சர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தமிழக அரசின் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறையின் சார்பில் தொலைபேசி உதவி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

உதவி தேவைப்படுவோர் 1 8 0 0 – 3 0 9 3 7 9 3 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் பெரிய அளவிலான மரக்கன்றுகள் நடும் இயக்கத்தினை அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் இன்று தொடங்கி வைத்தார்.

லக்னோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இதனை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்த சிறப்பு இயக்கத்தின் கீழ் 36 கோடியே 50 லட்சம் மரக்கன்றுகள் நடப்படவுள்ளதாக கூறினார்.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் நோக்கில், அன்னையின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தை பிரதமர் தொடங்கி வைத்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் அடிப்படையில் இந்த மரக்கன்றுகள் நடும் சிறப்பு இயக்கம் நடைபெறுவதாகவும் திரு. யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.

>>>>><<<<<

தெலங்கானா சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடரில், திறன் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதற்கான மசோதா தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அம்மாநில முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்த தெலங்கானா திறன் பல்கலைக் கழகம், ஹைதராபாதில் ஏற்படுத்தப்படவுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வருடத்திற்கு 20 ஆயிரம் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் நோக்கில் இந்த பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்படவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாம் ஆண்டில் 2 ஆயிரம் மாணவர்கள் சேர்க்கப்படவுள்ளதாகவும், 17 பிரிவுகளில் பாடங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு முடிவுகளை தேசிய தேர்வு முகமை, மையங்கள் வாரியாக இன்று வெளியிட்டுள்ளது.

அந்த முகமையின் இணையதளத்தில் முடிவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

>>>>><<<<<

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் திரு. **Manoj Soni** தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் பதவியை ராஜினாமா செய்துள்ளதாகவும், இதுவரை அவரது ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றும் அதிகார வட்டாரங்களை மேற்கோள் காட்டி பிடிஐ தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதை அடுத்து, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், நீலகிரி மற்றும் கோவை மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி வாயிலாக இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அவர் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

இதற்கிடையே, கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் காரணமாக ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து வினாடிக்கு 60 ஆயிரம் கனஅடிக்கும் கூடுதலாக உள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். (வாய்ஸ் பைட் - தண்டபாணி 48 செகண்ட்ஸ்)

இந்நிலையில், மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த 48 மணிநேரத்தில் 11 அடி அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 33 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் 20ஆம் ஆண்டு நிறைவு விழாவை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் இன்று தொடங்கி வைத்தார்.

மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், 'தூங்கா நகரம்' என்று பெயர் பெற்ற மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளை ஏற்படுத்தப்பட்டிருப்பது பொருத்தமானது என்று குறிப்பிட்டார்.

>>>>><<<<<

ஹரியானாவில் காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. **Surender Panware**–ஐ அமலாக்கத்துறையினர் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை வழக்கு தொடர்பாக இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

இந்தியா - பூட்டான் இடையே மேம்பாட்டு ஒத்துழைப்புக்கான பேச்சுக்கள் இன்று தொடங்கின.

பூட்டானில் நடைபெற்று வரும் இப்பேச்சுக்களில் இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரியும், பூட்டான் சார்பில் அந்நாட்டு வெளியுறவுத்துறை செயலர் **Aum Pema Choden -** னும் பஙகேற்றுள்ளனர்.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான அம்சங்கள், இந்த பேச்சுக்களில் இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

சர்வதேச செஸ் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**>>>>><<<<<**

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

அமெரிக்காவின் ஹூஸ்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு முதல் மூன்று ஆட்டங்களிலும் இந்தியா வெற்றி பெற்றது.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியா - கனடாவை எதிர்கொள்கிறது.

மகளிர் பிரிவில் இந்தியா, பிரேஸில் மற்றும் ஆஸ்திரேலியாவை வென்றது.

**>>>>><<<<<**

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டி தாய்லாந்தின் **Sriracha-**வில் இன்று தொடங்குகிறது.

ஐந்து எடைப் பிரிவுகளில் பதக்கங்களுக்கான போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

**>>>>><<<<<**

**Swiss** ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 7-6 என்ற செட்கணக்கில் நெதர்லாந்தின் **Robin Haase Sander Krends** இணையை வென்றது.

**>>>>><<<<<**

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli -** ஜப்பானின் **Hiroko Kwata** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<<**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பில் பங்கேற்கும் குழுவில் பாதுகாப்புப் படையை சேர்ந்த 24 பேர் இடம் பெற்றுள்ளனர்.

**>>>>>END<<<<<**